**புத்தள பிரதேச சபை - 2022**

-----------------------------------------

## 1. <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புத்தள பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் நேரடி வைப்புகளாக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 313,241 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது இத்தவறை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | நேரடி வைப்புக்கள் தொடர்பாக வங்கியிடம் விசாரித்து இன்னும் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு 2023 ஆம் ஆண்டின் போது செலுத்த வேண்டிய ரூபா 1,593,283 ஆன கடன் மற்றும் வட்டி தொகை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை பொறுப்பின் கீழ் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை | - மேற்படி - | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அனைத்து பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதி ரூபா 11,992,193 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதும் 2034 நவம்பர் வரை செலுத்த வேண்டிய கடன் தொகை ரூபா 17,393,335 ஆக இருந்தது | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன செலவினம் ரூபா 12,984,131 ஆக | - மேற்படி - | சரியான பெறுமதி நிதிக்கூற்றுகளில் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்த போதும் அது நிதி நிலைமை கூற்றில் ரூபா 6,130,936 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | | உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | சபையால் நடத்திச் செல்லப்படுகின்ற நிர்மாண கடன் கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் ஒக்கம்பிட்டிய பொது நூலகத்தின் கூரை நிர்மாணத்திற்காக விவசாய அமைப்புக்கு செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் ரூபா 290,221 மற்றும் மேலும் ரூபா 169,020 ஆன 20 கடன் மீதிகள் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை | - மேற்படி - | அனைத்து சொத்துக்கள் பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயல்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 8,044,582 தொகை அதிலிருந்து செலவிடப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 8,311,766 மற்றும் மீண்டும் செலவினம் ரூபா 45,000 நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பிரதான பேரேட்டின் பிரகாரம் பொது நிர்வாக ஏனைய வருமானம் ரூபா 3,878,545 ஆக இருந்த போதும் அது நிதிச் செயலாற்றல் கூற்றிற்கு ரூபா 9,436,158 எனக் உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அனைத்து வருமானங்களும் சரியாக நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டிற்காக பிரதான பேரேட்டின் பிரகாரம் பொது நிர்வாக ஏனைய வருமானம் ரூபா 51,103,562 ஆக இருந்த போதும் அது நிதிச் செயற்பாட்டுக் கூற்றிற்கு ரூபா 58,343,857 என உள்ளடக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | அனைத்து வருமானங்களையும் செலவினங்களையும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஐ) | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 799,854 பெறுமதியான 02 நிர்மாணங்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை | - மேற்படி - | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | சபையால் 50 நீர்மானிகளை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 799,500 தொகை ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஓ) மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 328,000 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 1,057,127 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | அனைத்து வருமானங்களை யும் செலவினங் களையும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| (ஔ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 4,523,081 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 2,501,813 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான பெறுமதி நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஃ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு எழுதிகருவி இருப்புகள் ரூபா 309,154 ஆக இருந்த போதும் அது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 237,259 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது இருப்புக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | - மேற்படி - | இறுதி இருப்பின் பெறுமதி சரியாக கணக்கிடல் வேண்டும். |
| (க்) ரூபா 12,400,000 மதிப்பீட்டு பெறுமதியான 4 மயானங்கள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 11 காணிகள் 07 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (க) வெளிதரப்பினரால் பிரதேச சபைக்கு எதிராக தொடரப்பட்ட 02 வழக்குகள் தொடர்பாக நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை | - மேற்படி - | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் சரியாக மேற்கொள்ள வேண்டும் |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் அட்டவணைகளின் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுக்கு இடையே ரூபா 1,566,813 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது | நிதிக்கூற்றுக்களில் மற்றும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகளில் உள்ள வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சரியாக நாளதுவரையாக்கி இணக்கமிண்மைகளுக்கு காரணங்கள தேடி சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 309,199,670 ஆன காணி மற்றும் கட்டிடங்களின் மீதி தொடர்பாக தொழில்சார் மதிப்பீட்டாளரின் அறிக்கைகள, உரித்துறுதி சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | பிரதேச சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களுக்காக முறையான மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தொடர்பாக தொழில்சார் மதிப்பீட்டாளரைக் கொண்டு மதிப்பீடு செய்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமிண்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றம் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) 19(xii) ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான 15 கடைகள் 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த நீண்டகால குத்தகைக்குரிய அங்கீகாரத்தை வழங்குமாறு விடயப் பொறுப்பு அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டு இருந்த போதும் அதற்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை | நீண்ட காலமாக குத்தகைக்கு வழங்குவதற்கான விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) 24(1) (அ) பிரிவு | சபைக்குரிய 202 ஒழுங்கைகளை வர்த்தமானில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்க வில்லை | இனங்காணப்பட்ட பொது வீதிகள் மற்றும் ஒழுங்கைகள் வரைபடமாக்கி வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். | வீதிப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | வைப்புக் கணக்குகளில் காணப்பட்ட 02 ஆண்டுகளை மேற்பட்ட ரூபா 1,341,723 ஆன 29 வைப்பு மீதிகள் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை | நிர்மாண பிடிகாசு தொகையை விடுவித்துக் கொள்ளுமாறு குறித்த அமைப்புக்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்படாத வைப்புத் | 02 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்கள் மீதிகள் தொடர்பாக நிதி பிரமாணங்களின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தொகைகளை 2023 ஆம் ஆண்டில் வருமானத்துக்கு எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை | சபையினால் 638 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்த போதும் வீதிவிளக்குகள் வெளிச்சமூட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்ட இருக்கவில்லை | மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தயவுடன் அறிய தருகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,098,689 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,618,055 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,191,067 | 2,183,916 | 2,247,344 | - | 2,191,067 | 2,183,916 | 1,677,199 | 506,717 |
| (ii) | வாடகை | 6,604,400 | 9,734,116 | 6,242,250 | 3,491,866 | 6,503,500 | 6,706,532 | 4,634,882 | 2,071,650 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,000,000 | 1,956,545 | 1,956,545 | - | 1,486,000 | 4,117,854 | 4,117,854 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 14,374,000 | 24,637,080 | 14,733,051 | 9,903,129 | 35,824,600 | 24,637,081 | 17,959,389 | 6,677,692 |
| | | 25,169,467 | 38,511,657 | 25,179,190 | 13,394,995 | 46,005,167 | 37,645,383 | 28,389,324 | 9,256,059 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மொத்த வருமானம் ரூபா 38,511,657 ஆக இருந்த போதும் ஆண்டின் இறுதிவரை அதில் ரூபா 13,394,995 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்த பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 35 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதாக தயவுடன் அறிய தருகின்றேன் | சபையால் பபட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 26 வீத வரி அலகுகளி லிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 764,630 நிலுவைத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வீத வரி அலகுகளில் இருந்து எதிர்காலத்தில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நிலுவை வீத வரி அறவிடப்பட வேண்டும் |
| (இ) | 1988 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை சபைக்கு சொந்தமான வாரச் சந்தைகள் இறைச்சிக் கடைகள் மற்றும் மீன் கடைகள் உட்பட 06 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 1,864,472 ஆன வாடகை வருமானம் அறவிடப்பட்டு இருக்கவில்லை | 1988 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் வரை நிலுவைத் தொகை அறவிடுவதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ள போதும் குத்தகையாளர் களை கண்டுபிடிக்க முடியாததாகவும் 2019 ஆண்டில் நிலுவைகளை அறவிடுவதற்கு வழக்கு கோவைகளை சட்டத்தரணிகளுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | நிலுவை குத்தகை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான உடைத்து அகற்றப்பட்ட 14 பழைய கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 181,599 தொகை 2023 பெப்ரவரி 21 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவைத் தொகையை அறவிடுவதற்காக குறித்த கடை உரிமையாளர் களுக்கு நிலுவைத் தொகையை செலுத்துமாறு அறிவித்து நிலுவை அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் அறவடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை கடை வாடகை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| (உ) | சபை அதிகார பிரதேசத்தில் தாபிக்கப்பட்டிருந்த 03 நிறுவனங்களுக்குரிய 07 தொடர்பாடல் கோபுரங்களில் இருந்து 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 174,000 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை | தொலைபேசி தொடர்பாடல் கோபுரங்களில் நிலுவை கட்டணங்களை அறவிடுவதற்காக நிலுவை அறிவித்தல் கடிதங்கள் உரிய தனியார் நிறுவனங்களுக்கு அனுப்பி உள்ளதாகவும் | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கோபுரங்களுக்காக அறவிட வேண்டிய நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் அறிய தருகிறேன். | |
| (ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 968 நீர் பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 449,787 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க் கட்டண வருமானங்களை எதிர்காலத்தில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | நிலுவை வருமானங்களை விரைவில் அறவிட வேண்டும். |
| (எ) மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 104,680 தொகையும், முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,407,812 தொகை கிடைக்க வேண்டியிருந்தது. | நிலுவை நீதிமன்ற தண்ட பணம் மற்றும் முத்திரை கட்டணங்களை விரைவில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை | நிலுவை வருமானங்களை விரைவில் அறவிட வேண்டும். |

## 2.3 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை அறவீடுகளுக்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 696,241 தொகை அறவிட வேண்டியிருந்தது. | பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து மிகை அறவீடுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக் அறிய தருகின்றேன். | விதிக்கப்பட்டுள்ள மிகை அறவீட்டினை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்தள பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் இனங் காணப்பட்ட இடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக கட்டணங்களை அறவீடுவதற்கு 2256 ஆம் இலக்க 2021 நவம்பர் 26 ஆம் திகதிய வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு இருந்த | வாகனங்களை நிறுத்து இடங்களில் இருந்து பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன் | இனங் காணப்பட்ட மோட்டார் வாகன நிறுத்துமிடங்களில் இருந்து கட்டணங்களை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதும் 2023 பெப்ரவரி 21 ஆம் திகதி வரை சபை அதிகார பிரதேசத்தில் இனங்காணப்பட்டு இருந்த 9 மோட்டார் வாகனங்களை நிறுத்துமிடங்களில் இருந்து கட்டணங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | | |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய மோட்டர் கிரேடர் இயந்திரத்தில் இருந்து 2022 ஜூலை 14 ஆம் திகதி ரூபா 64,000 பெறுமதியான 161.9 லிட்டர் டீசல் முறையற்ற வகையில் வெளியேற்றப்பட்டு இருந்ததுடன் 2023 பெப்ரவரி 21 ஆந் திகதி வரையில் அது தொடர்பாக பொறுப்பான தரப்பினர்கள் இனங் காணப்பட்டு அத்தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் காணாமல் போனமை தொடர்பாக புத்தள போலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தற்போதைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு அறவிடப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரிகள் அறவிடுவதற்குரிய 2004 ஆம் ஆண்டின் போது இறுதியாக மேம்படுத்தப்பட்ட பிரதேசங்கள் இனங் காணப்பட்டு இருந்ததுடன் காலரீதியில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களை இனங்கண்டு வீத வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது மேம்படுத்தப்பட்ட பிரதேசங்களை இனம் கண்டு வீதவரியை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | உரிய காலத்தில் மேம்படுத்த பிரதேசங்களை இனங் கண்டு வீத வரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | வீதவரி அறவிடுவதற்குரிய ஆதனங்கள் 2007 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் உரிய காலத்தில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டின் போது வீதவரி அறவீடுகளுக்குரிய குறித்த ஆதனங்களை காலரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பதுடன் 2023 ஆம் ஆண்டின் ஆண்டு முதல் அதை செயல்படுத்துவதாக அறிய தருகிறேன். | வீதவரி அறவிடுவதற்குரிய ஆவணங்களை கால ரீதியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 67 கடைகளின் மாதாந்த குத்தகை வாடகையை அறவிடும் போது ஊவா மாகாண சபையின் பிரதான மதிப்பீட்டாளரின் 2018 ஜூலை 24 ஆந் திகதிய எம்ஓ/ஆர்டீ/498 ஆம் | மதிப்பீட்டுக்கு முன்னர் அறவிடப்பட்டிருந்த கடை வாடகையை: 67 கடைகளில் இருந்து அறவிடுமாறு ஊவா மாகாண ஆளுநரின் வாய்மொழி அறிவுறுத்தல் மற்றும் எழுத்து மூல | மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய அறவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இலக்க மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த துடன் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபை நிதியத்திற்கு ரூபா 24,687,400 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குறிப்பின் மூலம் அறவிடுமாறு உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 2021 ஜனவரி 05 ஆம் திகதிய 1/1/4/4/12 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3.3 <u>சொத்துக்கள் முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குரிய 52 காணிகளின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு பொறுப்பேற்கப் பட்டிருக்கவில்லை | மதிப்பிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறித்து மதிப்பீட்டு சட்டத்தின் பிரகாரம் அறவீடு செய்யப்பட வேண்டும். எனது நிறுவனத்தினால் உடமை கொள்ளப்பட்டிருந்த ஆதனங்கள் கையேற்பு கட்டளை மூலம் கையேறந்றல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதை விரைவில் மேற்கொள்வதற்காக புத்தள பிரதேச செயலாளர் அவர்களுக்கு 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மீண்டும் அறிவிக்கப்பட்டு உள்ளது. | சபைக்குரிய காணி சட்டரீதியாக குறித்து கையேற்கப்பட வேண்டும் |
| (ஆ) சபைக்கு உரிய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கிய மைக்காக 2010 - 2022 காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 8,746,725 ஆன நிலுவை வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை | கடந்த ஆண்டுகளுக்குரிய நிலுவை வாடகை வருமான அறவீடு தற்போது இடம்பெற்று வருவதுடன் எஞ்சிய நிலுவைத் தொகையையும் எதிர்காலத்தில் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத் தருகிறேன் | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) சபையால் பயன் படுத்தப்படுகின்ற இரண்டு வாகனங்களின் சட்ட ரீதியான உரித்தினை சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை | சிறிய உழவு இயந்திரம் கமநல சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்படுவதுடன் திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு சபைக்கு கையேற்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். அவ்வாறு மோட்டர் கேடர் இயந்திரம் புத்தள பிரதேச சபைக்கு நன்கொடையாக கிடைத்திருந்ததுடன் அது குறித்த ஆவணங்கள் எதுவும் இல்லை என்பதால் இந்த இயந்திரத்திற்காக இதுவரை ஆரம்ப உரிமையாளர் ஒருவரை கண்டுபிடிப்பதற்கு முடியாமை காரணமாக குறித்த செயற்பாட்டை மேற்கொள்ள முடியாது இருந்தது | சபைக்கு சொந்தமான வாகனங்களின் சட்டரீதியான உரித்தையை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வீதிகளுக்கு குருணிக்கற்கள் இடும் 03 செயற்திட்டங்களுக்குரிய லுனுகல கொலனியில் குருணிக்கற்களை பெற்றுக் கொள்ளுமிடத்திலிருந்து அபிவிருத்தி செய்யும் வீதி வரை குருணிக் கற்களை போக்குவரத்துச் செய்வ்தற்காக காணப்படும் தூரத்தை கூடுதலாக காட்டியமை காரணமாக ரூபா 111,974 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் தேவையானண, நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கொடுப்பினை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையில் சேவை புரிந்த 21 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 112,569 ஆன கடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை | அந்நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியதருகிறேன் | நிலுவை கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள் மற்றும் உள்ளவாறான வருமான மற்றும் செலவினங்களுக்கு இடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல் அவதானிக்கப்பட்டதால் வருமான செலவினக் கட்டுப்பாட்டில் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் முறையாக வருடாந்த பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | வருடாந்த பாதீட்டு மதிப்பீடு நடைமுறறச் சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது இலக்குகளை நிறைவேற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும் |